உ

# வைத்திய போதினி.

சித்திரப் படங்களுடன் கூடிய வைத்திய சம்பந்த
மான ஓர் மாதாந்தத் தமிழ் பத்திரிகை.

| புத். 1. | 1910-ஞு செப்டம்பர்மீ 1உ | நெ. 5. |
|---|---|---|

## பத்திராதிபர் குறிப்பு.

நமது பிரிய சந்தா நேயர்களே!

இந்நிலவுலகில் 1,45,00,000 தமிழ்மக்களிருந்தும் நமது போதினிக்கு ஓராயிரம் சந்தா நேயர்கள்கூட ஏற்படாதவிஷயம் மிக்க வியப்பேயாகும். சொற்ப சந்தாவைக்கொண்டு பிரதி மாதமும் 28-பக்கங்களுடன் சித்திரப்படங்களோடு வெளிவரும் இப்பத்திரிகைக்கு வருஷமொன்றுக்கு ஒரு ரூபாய் கொடுத்தாதரிக்க முன்வராத நந்தென்னிய வாசிகள் பின்னர் யாதுதான் செய்வார்களோ யாமறியோம்.

நமது போதினியைப்பற்றி நமது நண்பரிலனேகர் புகழ்ச்சியாக பல கடிதங்கள் வரைந்து வருகிறார்கள். அவர்களுடைய நன்மனதுக்கும் இஷ்டத்திற்கும் தக்கதாக தங்களால் கூடியவரையில் சந்தாதார்களைச் சேர்த்து விடுவார்களானல் எவ்வளவோ உத்தமமாகும்.

நம் பத்திரிகாபிமானிகளாகிய Mr, A. நாராயணஅய்யங்கார், Mr, A. பொன்னுசாமிபிள்ளை, Mr, சேனைபட்டி மு. ஆறுமுகம்பிள்ளை Mr, ஜான் மெஸர்ஸ் துரைராஜா அன் கம்பெனியார்களைப்போல, நம்பத்திரிகாபிமானிகள் ஒவ்வொருவரும், தத்தம் சக்திக்கியன்றவாறு தங்கள் தங்கள் மித்திரர்களையும் இப்பத்திரிகைக்கு சந்தாதாரர்களாய்ச் சேரும்படி செய்தால், பலதுளி பெருவெள்ளமாய் பெருகி பத்திரிகை காலவளவில் குன்றின்மேலேற்றிய விளக்கொளிபோல் பிரகாசிக்குமென்பதிலையமில்லை. நம்பத்திரிகாபிமானிகளுக்கு இது விஷயமாய் பிரதி பத்திரிகையிலும் வரைந்து வந்தும் நமது சந்தா நேயர் ஒருவரேனும் அவ்வண்ணம் செய்ய முற்படாதிருப்பதும் நம் சந்தா நேயர்களின் கவனக்குறைவேயன்றி பிறிதொன்றுமில்லை. இப்பத்திரிகை எம்சொந்த லாபத்திற்கன்றி உலக நன்மையைப் பெரிதுங்கருதியே ஆரம்பிவிக்கப்பட்டதென்பதை மீண்டும் சொல்வது மிகையாகாது. இனியேனும் நம் சந்தாநேயர்கள் போதினியின் விஷயமாய் போதிய பாடுபட முற்படும் படியாய் மும்முறையும் வேண்டிக்கொள்ளுகிறோம்.

## மாமிசம், ஆங்கிலத்தில் (MUSILES) மஸில்ஸ் என்று சொல்லப்படும்.

மாமிசம், சதை, இறைச்சி, புலால், ஊன், தசை அல்லது பேசி என்று சொல்லப்படுகிற, மனிததேகத்திலிருக்கிற சிவந்த மாமிசங்கள் அடுக்கடுக்காய் அமைந்திருக்கும். சில அகலமாயும், சிலநீண்டுமிருக்கும், அநேக சிறிய இழைகள், சேர்ந்து ஒவ்வொரு மாமிசம் ஏற்படுகின்றது, இழைகளையும் மாமிசங்களையும் ஒன்றோடொன்று இணையும்படி வலை போலொத்த சவ்வால் கட்டியிருக்கும். (Cellular tissue-ஸெல்லுலர் டிஷ்யு) எனும்போடு ஒட்டிக்கொண்டிருக்கிற மாமிசமுனைகள் வெளுத்து பலரூபங்களாயிருக்கும், சில நரம்புகளைப்போல் நீண்டும் சிலஅகலமாயும் இருக்கும். அதற்கு மாமிசத்தந்தி (உள்நாணி, தசைநார், வன்னசை) என்றும், ஆங்கிலத்தில் (Tendon—டென்டன்) என்று பேர், அகலமாய் விரிந்திருக்கிற மாமிசத்தந்திக்கு (Aponeurosis—அப்பனியுரோஸிஸ்) என்றுபேர். மாமிசத்தின் துவக்கத்துக்கு, ஆரம்பமுனை (Origin ஆரிஜன்) என்றும், இணைந்துபோகிற முனை, (Insertion இன்ஸர்ஷன்) என்றுஞ்சொல்லப்படும். சதையின் மத்திய பாகத்திற்கு உடல் என்றுபேர்.

நமது சரீரத்தில் இரண்டு ஜாதி சதைகளுண்டு, ஒரு ஜாதி மனதுக்கேற்றபடி அசையும், அவைகளுக்கு மனதுக்கயிக்குசதைகள் என்றும் ஆங்கிலத்தில் (Voluntary Musiles-வாலென்டரி மஸில்ஸ்) என்று சொல்லப்படும். மற்றொரு ஜாதி தற்செயலாய் அசையும், மனதுக்கயிககமிராது, அவைகளுக்கு மனதுக்கயிக்கமில்லாத சதைகள் ஆங்கிலத்தில் (Involuntary Muscles-இன்வாலென்டரி மஸில்ஸ்) என்று பேர். இரைப்பை, குடல், இருதயம் ஆகிய இவைகளிலிருக்கிற சதைகளுக்கு தற்செயலாய் நடக்கிற குணமுண்டு. மனதுக்கு வசப்படாது. நமது சுவாதீனத்திற்கு உட்படாதிருக்கிறபடியால், அவைகள் மனதுக்கயிக்கமில்லாத சதைகள், மற்றவைகள் மனதுக்கயிக்கப்பட்டவைகளாம்.

மனித தேகத்தில் சுமார் 426 சதைகள் உண்டு. மாமிச சலனத்தால் தேகத்தினுடைய வியாபாரங்கள் நடக்கின்றன். கண்சிமிட்டுதல், நாக்கை நீட்டுதல், கைகால்களை அசைக்குதல், தம்புரு, வீணை முதலிய வாத்தியங்கள் மீட்டுதல், அபிநயம் செய்தல், சம்மட்டியடிக்குதல் இவை முதலிய சலனங்கள் மாமிசங்களால் உண்டாகின்றன.

மாமிசங்களுக்குறிய தொழிலை ஒருவாராய்ச் சேர்த்துச்செய்த அட்டவணையை இதனடியில் காண்க.



அங்க அமைப்பிலுள்ள நிண நரம்புகள், ரசதாரை இவைகளைக்காண்பிக்கிற படம்.

1. நெற்றிச்சதை சுருங்கினால், புருவங்கள் மேலுக்குப் போகும்.

2. கண்குழிகளைச் சுற்றிக்கொண்டிருக்கிறசதைகள் சுருங்கினால், கண்கள் மூடிக்கொள்ளும்.

3. மூக்குக்கடியிலிருக்கிற சதைகள் சுருங்கினால் மேல் உதடு உயரும்.

4. உதடுகளின்சதைகள் சுருங்கினால் வாய் மூடும்.

5. முகவாயிலிருக்கிற சதைகள் சுருங்கினால், கீழுதடு கீழுக்கிறங்கும்.

6. கழுத்து முன்புறத்துச் சதைகள் சுருங்கினால் தலைமுன்னுக்கு வளையும்.

7. பிடரிச்சதைகள் சுருங்கினால், தலையை நிமிரச்செய்யும்.

8. சரீர முன்புறத்துச் சதைகள் சுருங்கினால் உடம்பு முன்னுக்கு வளைந்து விலாவெலும்புகள் கீழுக்கிறங்கும்.

9. முதுகுசதைகள் சுருங்கினால், முதுகு நிமிரும்.

10. மார்புச்சதைகள் சுருங்கினால் தோள்கள் மார்போடணையும்.

11. முதுகின் மேற்புறத்துச் சதைகள் சுருங்கினால் தோள்கள் பின்னுக்கிழுபடும்.

12. புஜத்தின் முன் பக்கத்துச்சதைகள் சுருங்கினால், முழங்கை முடங்கும்.

13. புஜத்தின் பின் புறத்துச்சதைகள் சுருங்கினால் முழங்கை நிமிரும்.

14. முன்கையின் முன் புறத்துச்சதைகள் சுருங்கினால், மணிக்கட்டும் விரல்களும் முடங்கும்.

15. முன்கையின் பின்புறத்துச்சதைகள் சுருங்கினால், மணிக்கட்டுபின்னுக்கு வளையும் விரல்கள் நிமிரும்.

16. பிரட்டத்துச்சதைகள் சுருங்கினால், தொடை வெளிப்புரம் புரண்டு பின்னுக்குப்போகும்.

17. தொடையின் முன்புறத்துச் சதைகள் சுருங்கினால், முழங்கால் நிமிரும்.

18. தொடையின் பின்புறத்துச் சதைகள் சுருங்கினால், முழங்கால் முடங்கும்.

19. முழங்காலுக்குக் கீழ் காலின் முன்புறத்துச்சதைகள் சுருங்கினால், புறங்கால் முன்னுக்கு வளைந்து, விரல்கள் நிமிரும்.

20. கெண்டைச்சதைகள் சுருங்கினால் பாதம் முன்னுக்கு வளை து விரல்கள் வளையும். முன்கையைப்பற்றிப் பிடித்து, விரல்களை அசைத்துப்பார்த்தால் மாமிச சலனத்தைக் கண்டு கொள்ளலாம்.

---

## மரம் முதலியவைகளுக்குக் காணும் வியாதிகள்.

நமது தேசத்தில் மனிதர்களுக்கும், மிருகம், பக்ஷிமுதலிய பிராணிகளுக்கும், பலவிதமான வியாதிகள் தோன்றி ஒவ்வொரு வருஷத்திலும் ஆயிரக்கணக்கான பிரஜைகளையும் கால்நடைகளையும், பக்ஷிஜாதிகளையும் மாய்த்து வருவதுபோல மரம், செடி, கொடி முதலியபயிர்களுக்கும் பலவிதமான வியாதிகள் தோன்றிப் பாழாக்கி வருவதை யாவருமறிந்திருந்தாலும், மனிதர்களுக்குத் தோன்றும் வியாதிகளுக்கு வியாதி மூலத்தைக் கண்டுபிடிக்க எவ்வளவு தூரம் பிரயாசைப்பட்டு அவைகளை நீக்கத்தகுந்த முறைகளையும் ஔஷதாதிகளையும் அரிய முயற்சி செய்கிறார்களோ அவ்வளவு தூரம் வாயில்லா ஜீவன்களுக்கு நேரும் வியாதிகளுக்கு வியாதி மூலத்தைக்கண்டு அவைகளை நீக்கத் தகுந்த முறைகளையும் ஔஷதங்களையும் அறியப் பாடுபடுகிறவர்கள் அரிதாயிருக்கிறார்கள் நமது தேசவாசிகளுக்கு இன்றியமையாததான மாடு, பசு, எருமை, ஆடு முதலியவைகளுக்கு நேரும் வியாதிகளையே நீக்க விசேஷ அக்கறையும் ஆவலும் உதிக்காத நம் ஜனங்கள், தாதுவர்க்கங்களாகிய மரம், செடி, கொடி, பயிர்களுக்கு நேரும் வியாதிகளைப்பற்றி கவனஞ் செலுத்தி அவைகளை நீக்க முறைகளையும் தக்க ஔஷதங்களையும் கண்டுபிடிக்க முயற்சி யெடுப்பது எக்காலமோ? சுதேச கைத்தொழிலை பெருகச் செய்யவேண்டுமென்ற பெரும் நோக்கத்தில் தங்கள் காலத்தை யெல்லாம் செலவழிக்க முன்வருகிற அறிவாளிகளும், தேசாபிமானிகளும் நம்தேசவாசிகள் விருத்தியடைவதற்கு அவசியமான சிற்சில விஷயங்களை மட்டும் தான் திருஷ்டாந்தங்களாக எடுத்துக் கூறிப்போதிக்க இயலுமேயன்றி நமக்கு இன்றியமையாத தான் ஒவ்வொரு காரியத்தையும்

தொட்டுக்காட்டி செய்யத்தூண்டுவது அசாத்தியமானதேயாகும். ஆகை யால் நாமே ஒவ்வொரு அற்பமான காரியத்தையும் அதியவசியமான காரியமென்பதாக கவனித்து முயற்சி செய்து ஆராய்ந்தறிந்து தக்க பரிகாரங்களைச் செய்து விருத்தி யடையவேண்டும்.

மரம், செடி, கொடி, பயிர்களுக்கு நேரும் பற்பலவிதமான வியாதி களை அங்கங்கேயுள்ள குடித்தனக்காரர்களும் வியவசாயிகளும் ஒருவாறு அறிந்திருந்தாலும், அவைகள் நேருவதற்குக் காரணத்தையும் அவைகளை நீக்கத்தக்க முறைகளையும் கண்டு பிடித்து செய்து பயனையடையாதவர் களாகவே இருக்கிறார்கள். மரம், செடி, பயிர்களுக்கு தடுக்கமுடியாத சில வியாதிகள் நேர்வதுண்டு. அதாவது வானம் பார்த்த பயிர்களுக்கு மழைக் குறைவால் சோகை, காய்ச்சல், வரட்சி என்பதாக சில வியாதி கள் தோன்றிப் பயிர்கள் வரண்டு போகத்தொடங்கும். இந்த வியாதி களுக்கு மழையடித்தாலன்றி வேறு பரிகாரம் செய்ய முடிவதில்லை. காலரா காலத்தில் மழையடித்தும், செவ்வையாக எருவிடப்பட்டும், பட் டம் தவறாமல் களை, கொத்து, வெட்டு முதலிய வேலைகள் செய்தும் நேரப்பட்ட சில வியாதிகளிருக்கின்றன.

ஒவ்வொரு பயிருக்கும் நேரப்பட்ட ஒவ்வொரு வியாதியையும், அவைகளின் குணகுணங்களையும், அவற்றிற்குப் பரிகார முறைகளையும் இச்சிறுவியாசத்தில் வரைவதென்றால் சாத்தியமாமோ? ஆயினும் திருஷ்டாந்தமாக சிலவற்றைக் கூறிமுடிப்போம்.

காப்பிச் செடிகளுக்கு கருப்பு என்பதாக ஒரு கொள்ளை நோய் உண்டாவது சகஜம். இது செடிகளின் பேரில், கருப்பான தாரைப்பூசி னால் எப்படி தோற்றுமோ, அவ்விதமாய் ஒருவித கருப்பான சிறிய பூச்சிகளுண்டாய் வெகு சீக்கிரத்தில் செடிகளையே பாழாக்கிவிடுகிறது. இதற்கு ஐரோப்பிய வியவசாயிகள் பலவிதமான முயற்சிகள் செய்தும் நாளது வரையில் தகுந்த முறைகளையும் ஔஷதங்களையும் கண்டுபிடிக்க வில்லை. நீலகிரி மலையின் பேரிலுள்ள பல காப்பித் தோட்டங்களில் இவ்வியாதி தோன்றிச் செடிகளைப் பாழாக்கித் தோட்டக்காரர்களைப் பெரும் நஷ்டத்திற் குள்ளாக்கிக் கொண்டு வருகிறது.

கரும்பு, சோளம் முதலிய சில பயிர்களுக்கும் சோகை என்பதாக ஒருவிதமான காய்ச்சல் நோய் திடீரென்று கண்டு, சோகையல்லது தழைகளை வாட்டி, வெளுக்கச் செய்து பயிரையே பாழாக்கி விடுகிற துண்டு.

உருளைக்கிழங்கு பயிர்களுக்கும் புள்ளி நோய் என்பதாக ஒரு வியாதி தோன்றுவதுண்டு, அவரைக்கு மசி என்பதாக ஒரு வித பூச்சிகள் விழுந்து பாழாக்குவதுண்டு. இவ்விதமாய் பயிர்களுக்கும், செடிகளுக்கும் நேரும் வியாதிகளைப்பற்றியும், கால் நடைகளுக்கு உண்டாகும் கொள்ளை நோய், கோமாரி முதலியவைகளுக்கும் காரணங்களை யறிந்து தக்க பரிகாரங்களையும், முறைகளையும் அறியவேண்டுமென்று பதினாலு வருஷ காலமாய் இந்தியாவின் பல பாகங்களுக்கும் பிரயாணம் செய்த காலத்தையும் மற்ற சமயங்களிலும், இவ்விஷயத்தில் கண்ணும் கருத்துமாய் ஆராய்ந்து வந்ததில் சிலமுறைகளையும் ஔஷதங்களையுமறிந்து சிற்சில சமயங்களில் அவைகளைப் பரீக்ஷித்துப் பலனடைந்து மிருக்கின்றோம்.

மைசூர் ராஜ்யத்தில் கொஞ்ச காலத்திற்கு முந்தி சந்தன மரங்களுக்கு ஒருவிதமான வியாதிதோன்றி மரங்கள் பட்டுப்போவதாயும், அதன் காரணங்களை யறிந்து தகுந்த பரிகாரங்களைச் சொல்லுகிறவர்களுக்கு விசேஷ வெகுமதி கொடுக்கப்படுமென்பதாகவும், மைசூர் கவர்ன்மெண்டாராலேயே ஒரு விளம்பரம் பிரசுரஞ் செய்யப்பட்டிருப்பதாகக் கேள்விப்படுகிறோம். அதற்கு இதுவரையில் யார் எவ்விதமான முறைகளையும் பரிகாரங்களையும், அனுசரிக்கும்படி கூறினார்களோ தெரியவில்லை. அவைகள் எவ்வளவு தூரம் பலனைக் கொடுத்ததோ என்பது யாம் அறியமாட்டோம். ஆயினும் நாம் நம்முடைய ஆராய்ச்சியின் பலனாக அறிந்ததைப் பயிரங்கமாய்க் கூறுவது பிழையாகமாட்டாதென்று உன்னி இப்பத்திரிகையில் அடியில் காணும் விஷயங்களைக் கூறத்துணிந்தோம்.

சந்தன மரங்கள் வளர்ந்துள்ள பூமியானது காற்றுள்ளே பிரவேசிக்க முடியாமலும், தண்ணீர் செவ்வனே உட்சென்று ஒவ்வொருவேரின் நுனியிலுமுள்ள வாய்களுக்கு எட்டமுடியாமலும் இறுகி, கெட்டிப்பட்டுப்போய் விடுமானால் வேர்களில் ஒரு விதமான கறையான் போன்ற சிறிய செம்பூச்சிகளுற்பத்தியாகி, நாளாவட்டத்தில் வேர்களின் நுனியிலுள்ள வாய்களையே அரித்து ஆகாரமாக உட்கொண்டு, வேர்களைக் குடைந்து கொண்டு மரத்திலுள்ள சத்தாகிய ஈரத்தை ஆகருஷித்து, ஏராளமாய்ப் பெருகி, மரத்திற்கு முக்கிய ஆதாரமாகிய வேர்களின் நுனிவாயைச் சத்தைக் கிரகிக்கும் தன்மையற்றதாய்ச்செய்து விடுகிறது. இப்படிப் பூச்சிகள் வேரையரிப்பதால், மரத்தின் இலைகளில் சிறிது தினத்திற்குள் சிறிய சிவப்பான பொட்டுகளும், கொம்பு, அடிமரம் முதலியவற்றிற் குஷ்டம்போன்ற நிறமாற்றமும் காணப்படும். பின்னும் சிறிது தினத்திற்குள் மரம் பட்டுப்போம். இம்மரத்திலுள்ள சுகந்தமே இப்பூச்சிகள் அரிப்பதற்குக் காரணம்.

இதற்குப் பிரதி மரத்தினுடைய அடிப்புறத்தைச்சுற்றிலும் இரண்டடி அகலத்திற்கும், ஓரடியாழத்திற்கும் பள்ளம் வெட்டி, மரத்தின் பரிமாணத்திற்குத் தக்கபடி உப்பும் சாம்பலும் கலந்து கொட்டிப் பரத்தி மண்ணால் மூடி, தண்ணீர் நிற்கும்படி பாத்திகட்டிக் கொண்டு மூன்று நாள் தொடர்ச்சியாய் விடாமல் காலை வேளைகளில் எதேஷ்டமாகத் தண்ணீர் ஊற்ற வேண்டும். வனத்திலுள்ள மரங்களுக்கெல்லாம் தண்ணீர் விடுவது சாத்தியமில்லையே என்று தோற்றுமானால் மழை காலத்தை நோக்கியிருந்து முன் சொன்ன மாதிரி செய்யவேண்டும். ஆனால் மழைத் தண்ணீர், போடப்பட்ட உப்பையும் சாம்பலையும் வாய் வழியாகக் கரைத்துக்கொண்டு போகாமல் வேர்களுக்கு ஊறிச் செல்லும் படி பாத்தியை ஆழமாகவும் அகலமாகவும் செய்து வைக்க வேண்டும். மரம் ஒன்றுக்கு 4-படி முதல் காத்திரத்திற்குத் தக்கபடி 10-படி வரையில் போடவேண்டும். போடப்பட்ட உப்புக்கு சாம்பல் இரண்டு பங்கு அதிகமாக இருக்கவேண்டும். கடலுப்பே சிரேஷ்டமானது. இவ்வியாதியால் பீடிக்கப்படாத மரங்களுக்கு அடிப்பாகத்தில் மரத்தின் பரிமாணத்திற்குத் தகுந்த அளவாய் மழைத் தண்ணீர் நிற்கும்படியாக பாத்திகள் செய்துவைப்பதே போதுமானதாகும். அல்லது சிற்சில மரங்களுக்கு ஒரே பாத்தியாக கால்வாய்கள் போன்ற பள்ளங்கள் வெட்டிவைப்பது அனுகூலமானது. இவ்விதம் செய்து வந்தால் செந்நிறமான சிறிய பூச்சிகள் சீக்கிரத்தில் இறந்துபோமென்பதில் தடையில்லை. வரண்டு போகத் தொடங்கின மரங்களும் தளிர்க்கத் தொடங்கிவிடும். பரீக்ஷார்த்தமாகச் செய்து பார்க்கலாம். இவ்வளவு தானாவென்று அலக்ஷியஞ் செய்யாமல் பொறுமையுடன் செய்ய வேண்டும். செய்தால் சந்தன மரத்தைப் பிடித்த சனியன் உடனே தொலைந்து விடுமென்பதில் சந்தேகமில்லை.

இப்படியே கால்நடைகளுக்கும் பயிர், செடி, கொடிகளுக்கும் நேரும் வியாதிகளைப் பற்றி எமக்கு விவரமாய் அரையணா ஸ்டாம்புடன் எழுதினவர்களுக்கு அனுபோகத்தினால் அடைந்த அறிவை இலவசமாய்த் தெரிவிக்க சித்தமாயிருக்கிறோம். இதை வேறு பத்திரிகைக்காரர்கள் எழுதுவதாயிருந்தால் எமது விலாசத்துடன் பதிப்பிக்கும்படி கோருகிறோம்.

T. C. V. ரமணய்யர்.

## எனாமல் பாத்திரங்கள்.

**எனாமல் பாத்திரங்கள்:**—எந்த விஷயமும் நமது மேனாட்டார்கள் எடுத்துக்கூறினால் நம்க்குப்பத்தியமேயன்றி நம்முன்னோர்களே நமக்குக் கூறினால் அவ்வார்த்தை அவ்வளவு மதிப்புக்கொள்ளுவதில்லை, எனாமல்

பாத்திரங்கள் கூடாதென்று Mr. ராபர்ட்காஸ்பர் கூறுகின்றார். ஆகாராதிகள் செய்வதற்கும் பானங்கள் காய்ச்சுவதற்கும் ஒவ்வொரு வீட்டிலும் நாம் இப்போது எனமல் பாத்திரங்களையே உபயோகப்படுத்துகிறோம். பெண்டுகளுஞ்சரி புருஷர்களுஞ்சரி, எனமல் பாத்திரத்தின் தவள நிரத்தைக்கண்டு மயங்கி அவைகளையே வாங்கத்தலைப்பட்டனர். இன்னங் கொஞ்சகாலத்தில் சிரார்த்தாதிகளுக்குக்கூட எனமல் பாத்திரங்களையே உபயோகிப்பார்போலும்! இந்த ஆதுரத்தில் ஜனங்களுக்குச் சிலகேடுகள் சம்பவித்து இருக்கின்றன. இந்தப் பாத்திரங்கள் உள்ளே தடவிய வெண்மண் நிலைநிற்குமளவுதான் உண்ணவும் பருகவும் உபயோகமாகும். வெண்மண் சிறிதேனும் விழுந்தால் பாத்திரம் பிரயோஜனப் படுவதில்லை. எனமல் பாத்திரங்களில் அணுக்கள் உணவு பதார்த்தங்களோடு சேருகிறதினால் தேக அசௌக்கியத்திற்குக் காரணமாகிறதென்று வைத்திய விற்பன்னர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள் என்று கூறப்பட்டிருக்கிறது. இதனை நம்மவர்கள் கவனித்து எனமல் பாத்திரங்களை வாங்காதொழிவார்களாக.

## இரட்டைக் குழந்தைகள் பிறந்த சில விசேஷ சந்தர்ப்பங்கள்.

---

1. 'ஸாம்பையர்' என்னுங் கப்பல் சேதமடைந்து அதிலுள்ள ஜனங்கள் சிறிய படகுகளிலும் துண்டு துணிக்கைகளிலுமாகத் தொற்றி உயிர்தப்பி யோடும்போது, இரண்டு மரக்கட்டைகளால் இணைக்கப்பட்ட, ஒரு சிறியதெப்பத்தில் ஒரு மாது இரட்டைக் குழந்தைகளைப் பெற்றெடுத்தாள். அந்தத் தெப்பத்திலுள்ள எத்தனையோ ஆடவர் அலைபால் எறியப்பட்டும், பசியால் நலிந்தும் மடிய, இந்தப்பெண்மணியும் அவள் இரு கண்மணிகளும் தெய்வாதீனமாய் உயிர் பிழைத்து கரை வந்து சேர்ந்தார்களாம்.

2. சில வருஷங்களுக்குமுன் மாட்ரிட் நகரத்தில் நடைபெற்ற சர்க்கஸ் ஆட்டத்தில் கார்லோ லாம்புரோ என்பவரது பத்தினி, சிங்கம், புலி முதலிய துஷ்ட மிருகங்களோடு விளையாடிக்கொண்டிருக்குந் தருணத்தில் அவைகளின் கூண்டுக்குள்ளேயே யாவருமதிசயிக்க இரட்டைப் பிள்ளைகளைப் பெற்று குழந்தைகளுக்காவது அவளுக்காவது துஷ்ட மிருகங்களால் யாதொரு துன்பமுமணுகாது வெளியேறினளாம்.

3. பிராஞ்சிய ஜெர்மானிய யுத்தத்தில் மாடம் கோல்லட் என்பவள் இரண்டு குழந்தைகளைப் பெற்றெடுத்த சரித்திரம் மிகுந்த ஆச்சரியத்தைத்தரத்தக்கது. மாடம் கொல்லட் என்பவள் பிராஞ்சிய சைனியத்துக்கு ஆகார பதார்த்தம் சவதரித்துக்கொண்டிருந்த கண்ட்ராக்ட்காரரின், மனைவி செடன் நகரத்தில் 2000-க்கு மேற்பட்ட ஜெர்மானிய பீரங்கிகள் வாயைத் திறந்து அக்கினியைக் கொந்தளித்துப் பிராஞ்சியப் படைகளை அதமாக்கும்போது 'கொல்லட்துரைசானி படைமுகத்தில் தங்கியிருந்த கூடாரமும் குண்டுபெட்டு சிதறுண்டுபோக' அவளுக்கு துணையாய் நின்ற அவள் பர்த்தாவும் குண்டுபட்டு அவள் பக்கத்திலே மடிய, அந்தப் பதிவிரதை இரண்டு பெண் மக்களைப் பெற்று யாதொரு தீங்கணுகாது ஆச்சரியத்துக்குரிய விதமாய் அவளிரு மக்களோடு தப்பிக்கொண்டாளாம். (முஸ்லிம் நேசன்).

---

## வைத்தியக் குறிப்புகள்.

---

**ஈருள்ளியும் பிளேக்நோயும்** :—தற்சமயம் இவ்விடத்தில் பிளேக் நோயுள்ள ஒருவருக்கு மேற்கூறும் ஈருள்ளியாகிய ஈரவெங்காயத்தைத் துவைத்துத் தனிச்சாறெடுத்து சுமார் 1 மணிக்கொருதரம் $\frac{1}{8}$-படி வீதம் உள்ளேகொடுத்தும், அதன் சக்கையை நோயுற்ற கட்டியின்மீது கட்டியும் வந்ததில், இரண்டேநாளில் சௌக்கியமாகிவிட்டதால் இதனை எல்லோரும் அறியும்படி வரையலானேன். ரா. சாமிராஜு. செய்கூன்.

---

**சைந்தியவர்தி சூரணம் செய்முறை** :—சைந்தியலவணம், 1-பங்கு சீரகம் 2-பங்கு, ஓமம் 4-பங்கு, திப்பிலி 8-பங்கு, சுக்கு 16-பங்கு, கடுக்காய் 32-பங்கு, இவைகளின் தூளை நிறுத்தெடுத்து ஒன்றாய்க்கலந்து கொண்டு, வாந்தி, அக்கினிமாந்தம், கிருகிருப்பு, இவை முதலியவைகளுக்கு வேளை ஒன்றுக்கு 1 தோலா வீதம் தினம் 1-க்கு 2 வேளை கொடுக்கவும்.

---

**ஆவாரன் கிருதம் செய்முறை** :—பத்து பலம் ஆவாரன்பூவை 20-பலம் பசு நெய்யிலிட்டு 3-நாள் ஊறவைத்து, பிறகு காய்ச்சிவடிகட்டி அதில் 10-பலம் கற்கண்டும், ஏலம், சீரகம், லவங்கப்பட்டை, சடாமாஞ்சி, சந்தனம் இவைகளின் தூள்வகை 1-க்கு, விராகநிறை ஒன்றுவீதம் சேர்த்து கலந்துக்கொள்ளவும். உபயோகம், பித்தம், அரோசகம், அன்னத்துவேஷம், உஷ்ணம், மேகவியாதிகள் முதலிய ரோகங்களுக்கு 2-தோலா நிறை தினம் இருவேளை கொடுக்கலாம்.

---

**தேள்கோட்டல் Scorpion Sting** :—தேள்கொட்டலுக்குமருந்து தெரியாதவர்கள் உலகத்தில் யாருமில்லை, மந்திரத்தினால் விஷம் இறங்குவதுமுண்டு. தேள்கொட்டின உடனே விஷம் மேலுக்கேறாமல் கொட்டுவாய்க்கு மேல் கயிற்றால் கட்டிவிட்டு, அடியில் கண்ட சிலமருந்துகளில் ஒன்றை உபயோகிக்கலாம். (1) நாயுருவிப்பூண்டின் சமூல

த்தைக்கசக்கித்தேய்க்கலாம். (2) சுண்ணும்பு ஒட்டடை இவைகளை அரைத்துப்பூசலாம். (3) சுண்ணும்பும், உப்பும் சமனுய்ச்சேர்த்து அரைத்துப்பூசி அனல்காட்டலாம். (4) வெங்காயத்தைக்கொட்டின விடத்தில் $\frac{1}{2}$-மணி நேரம் தேய்க்கலாம். (5) பெருங்காயம் பூசலாம்.

---

வெள்ளைப்பூண்டும் அதன் உபயோகமும்:—வெள்ளைப்பூண்டு இத்தேசத்தில் எங்கும் உண்டு, இதன் ரசத்தைத் தேகத்தில் தடவினுல் சரீரம் கொப்புளித்து விடும். இதனுடைய குணம் கடுகினுடைய குணத்தைப் போலிருக்கும். இதற்கு ஜீரணம் செய்யக்கூடிய சக்தி இருப்பதால் இதைக்குழம்பில் சேர்ப்பார்கள். வெள்ளைப்பூண்டை அதிகமாக உபயோகித்தால் தலைவலி, வயிறு உப்புதல், தாகமெடுத்தல், தேகம் சூடாதல், பேதியுடன ரத்தங்காணல் இவை நேரிடும். காதுமந்தப்பட்டால் வெள்ளைப் பூண்டு ரசத்தை பஞ்சில் நனைத்து நாள் ஒன்றுக்கு 4, 5, 6, தடவை காதுக்குள் வைத்தால் குணப்படும். இதன் எண்ணெயைக் கீல்வாயு, வாயு, பிடிப்பு முதலியவைகளுக்கு உபயோகிக்கலாம். தேகத்தில் வலிவு குறைந்தால் பூண்டு சேர்க்கலாம்.

---

ரெங்கூன் அரிசியும் பெரிபெரி நோயும்:—இரங்கூன் அரிசி என்றும், கப்பலரிசி யென்றும், சுண்ணும்பு அரிசியென்றும் இவ்விதமான பெயருடன் ஒருவிதமான வெண்மையான பளபளப்புள்ள அரிசியை நம்மவர்கள் பார்த்திருக்கலாம். அது நம்நாட்டு அரிசியைவிட கொஞ்சம் மலிவான விலைக்குக் கிடைக்கிறதென்று சிலர் வாங்கி உபயோகிக்கிருர்கள். நமது அனுபோகத்தில் அது பலருக்கும் தேகத்துக்கு ஒத்துவருவதில்லை, சமைத்தால் சாதமும் அதிகமாய்க்காண்பதில்லை சிலசில்லரை வியாதிகளும்உண்டாவதாகத்தெரிகிறது. இப்போது ஒருவர்த்தமானம் எட்டுகிறது. பெரிபெரி என்ற நோய் அந்த அரிசியால் உண்டாகிறதாம். அதாவது மார்நோய், மாரடைப்பு முதலியன காணுகிறதாம். அந்த அரிசி, யந்திரசாலையில் குத்தப்பட்டு சுத்திகரிக்கப்படுவதில் பார்வைக்கு அழகாய் இருந்தாலும், அரிசிக்கு இருக்கவேண்டிய உத்தம குணங்கள் எடுபட்டுப்போகிறதாம். நமது தேசத்திலும் ரங்கூன் அரிசிதேகத்திற்கு கெடுதல் செய்கிறதென்று தெரிந்திருந்தும் அவ்வரிசியை வாங்கியுண்பதின் காரணம் தரித்திரமேயன்றி வேறல்ல.

---

## வர்த்தமானம்.

---

காஷ்மீர் சமஸ்தானத்தில் பேதி உபத்திரவம்:—பஞ்சாப்மாகாணத்தைச் சேர்ந்த காஷ்மீர் சமஸ்தானத்தில் பேதியுபத்திரவம் வெகுஜாஸ்தியாய் இருந்துவருவதாய் தெரிகிறது. போனஜூன் மீ 4வ அந்நோய் அந்தசமஸ்தானத்தில் தலைகாட்டிற்ரும். அந்தத்தேதிமுதல் நாளது வருஷம் ஜூலைமாதம் 14-ந்தேதிவரை அந்நோய் 1040 பேருக்குக் கண்டதாகவும் 572-பேர் இறந்துபோய்விட்டதாகவும் தெரிகிறது. சென்றமாதம் 14-ந்தேதியன்றும் அந்நோய் அடங்குங்குறிகளைக் காணவில்லையாம்.

**விருதுப்பட்டியில் விஷபேதி** :—இக்கொடிய நோய் இந்நகரை விட்டு நீங்கினபாடில்லையாம். வெகு பலமாக வேலைசெய்கிறதாம் தெருவெங்கும் அழுகைக்குரல் தொனிக்கிறதாம். வியாதியை நீக்கும்பொருட்டு தேவதைகளுக்கு பீடங்கள் போட்டு பலிகள் கொடுக்கப்படுகின்றனவாம். சானிடேஷன் திருப்தியாயில்லையாம், நகரின்சுகாதாரத்தை யூனியன் சேர்மெனவர்களும் அபாதகிரியும் கவனித்தலவசியம்

---

**பத்திரிக்கைவரவு** :—விவேகபோதினி, பிழைக்கும்வழி, கர்மயோகி, பிரஹ்மஞானவிளக்கம், திராவிடாபிமானி, Sulf-culture முதலியபத்திரிகைகள் வரப்பெற்றோம். வித்தியாபானு, செந்தமிழ், ஆயுர்வேதபாஸ்கரன் மாதர்மனோரஞ்சனி, வித்தியாபாஸ்கரன், பிரஜாநுகூலன் முதலியபத்திராதிபர்களுக்கு நமது பத்திரிகை பிரசுரிக்குந்தோறும் அனுப்பிவந்தும் ஷெபத்திராதிபர்கள் மாற்றுப்பத்திகை அனுப்பாதகாரணம் அறியோம் இனியேனும் பத்திரிகை அனுப்பிவருவார்களென்று எதிர்பார்க்கிறோம்.

---

நமது போதினியின், அபிவிருத்தி கருதிய திருவாவடுதுரை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ, மஹாசன்னிதானம் அவர்கள் ஏற்கனவே ரூ 35 கொடுத்திருப்பதாக, சென்ற மாதபத்திரிகையில் பதிப்பித்திருக்கிறோம். சன்னிதானம் அவர்கள் ரூ 50 கொடுப்பதாகவாக்களித்திருந்தபடியே, எஞ்சிய ரூ 15-ம், அதன் பிறகளித்திருக்கிறார்கள். மழலைப்பருவமுடைய நம் பத்திரிகையின் அபிவிருத்திகருதி, ஸ்ரீ மஹாசன்னிதானம் இன்நன்கொடையளித்ததானது மேகம் பூமிக்குச் செய்யும் உதவி போலாகும்.

---

தவளைத்தோல்:—ஜப்பான் தேசத்தார் தங்கள் தேசத்திலிருக்கும் **விகம்விதமான** தவளைகளைப் பிடித்து அவற்றின் தோல்களை உலித்துபதப்படுத்தி இங்கிலாந்து, ஜெர்மனி, அமெரிக்கா முதலான தேசங்களுக்கு அனுப்புகிறார்கள். தவளைத்தோலால் மனிப்பர்ஸ் (துட்டுப்பை) முதலிய் விநோதமான சாமான்கள் செய்கிறார்கள். ஒருதோல் சுமார் 4 அணாவுக்கு விலைபோகும். ஜப்பானியர் வருஷாவருஷம் ஏறக்குறைய பதினாயிர ரூபாய் பெறுமான தவளைத்தோலை ஏற்றுமதி செய்கிறார்கள். மனிதன் தவளையைக்கூட சும்மாயிருக்கவிடமாட்டானா?

---

ருஷியாவில் காலராவின் அதிகரிப்பு:—செயின்ட் பீட்டர்ஸ்பர்க்கில் மட்டும் 1205-பேருக்கு இது வரையில் காலரா கண்டிருக்கிறதென்றும், சுற்றுப்பக்க மாகாணங்களில் 65000-பேருக்குக் காலரா கண்டிருக்கிறதென்றும், காலரா மிகவிரைவுடன் அதிகரித்து வருகிறதென்றும், செயிண்ட் பீட்டர்ஸ் பர்க்கிலிருக்கும் "டைம்ஸ்" பத்திரிகையின் நிருபர் தெரிவிக்கிறார். காலரு கண்டவர்களில் சரிபாதி பேருக்கு மேல் மரணமடைகிறார்கள்.

இந்த வியாதியைத்தடுக்க சரியான வைத்தியர்களைக் கொண்டு வரும்படி தென்பாகத்துக்குகவர்ண்மெண்டார் ஆட்களை அனுப்பியிருக்கிறார்கள்.

---

காகங்களுக்குக் கெட்டகாலம்:—கல்கத்தா முனிசிப்பாலிட்டியார் கல்கத்தாவிலுள்ள காக்கைகளை யெல்லாம் கொல்லும்படி உத்தரவு செய்திருக்கிறார்களாம். காக்கைகளையும், காக்கைக்குஞ்சுகளையும் கொண்டுவந்து கொடுப்போருக்கு வெகுமதிகள் கொடுக்கப்படுகின்றன. இதுவரை எலிகளைக்கொன்று வந்தது காணுமல் இப்பொழுது காகங்களுக்கும் ஜோதிஷ சாஸ்திரப்படி மாரகதிசை வந்து விட்டது போலும், காகங்கள் எலிகளைத் தின்னுவது வழக்கமாகையால் பிள்ளையாரைப் பிடித்த சனியன் அரசமரத்தைப்பிடித்தாற் போல், காகங்களுக்கும் வாரண்டுகள் பிறந்துவிட்டனவோ என்னவோ தெரியவில்லை.

---

குருடருக்கு ஓர் புதிய பத்திரிகை:—லண்டன் நகரத்தில் பிரசுரமாகும்பேர் போன "டெயிலி மெயில்" என்னும் பிரபல் பத்திரிகை குருடரைப் பரிசத்தினுல் வாசிக்கும் பொருட்டு அவர்களுக்காக ஓர் விசேஷ வாராந்தரப்பத்திரிகை பிரசுரம் செய்து வருகிறது. பிரித்தானியாவில் 40,000-ம் குருடரிருக்கின்றார்கள். இவர்களது நன்மையைக்கருதி வெளியாகும் பத்திரிகையின் வருஷசந்தா 6 ஷில்லிங் 6-பென்சாம். இந்தப்பத்திரிகை "டிட் பிட்ஸ்" என்ற பத்திரிகைப்போன்ற வடிவமுடையதும், 20-பக்கங்கொண்டதும், எழுப்பமுடையதுமாயிருக்கின்றது. என்ன ஆதாயங் கருதிடெயிலி மெயில் பத்திராதிபர் குருடருடைய பத்திரிகையை வெளியிட்டாரோ தெரியவில்லை.

---

ஸிலோனில் ஜனன மரணக் கணக்குகள்:—இந்தவருஷம் மார்ச்சு மாதத்தோடு முடிவாகிற முதல் கால் வருஷக் கடைசி நாளன்று இத்தீவின் ஜனத்தொகை 4091380 முந்திய கால் வருஷ முடிவிலிருந்ததைவிட இத்தொகையில் 8445 அதிகம். ஏனெனில், மரணத்திலும் ஜனனம் 12671 அதிகத்தோடு இந்திய கூலிகளின் வரவைவிட, போக்கும் 4226 அதிகமாம். பிரஸ்தாப கால் வருஷத்தில் ரிஜிஸ்தரான ஜனனம் 39729. (34-ஐரோப்பியர்); மரணம் 27058 (25-ஐரோப்பியர்); மரணத்தில் வயதுக்குட்பட்ட குழந்தைகள் 7056; அகஸ்மாத்தாய் ஏற்பட்ட மரணம் 406; பாம்பு கடி 62; முதலைக்கடி 7; யானையால் 4; காட்டுப் பன்றியால் 1; இடிவிழுந்து 2; சூரிய உஷ்ணத்தால் 1; கொலையால் 40; தற்கொலையால் 33; கோர்ட்டாரால் விதிக்கப்பட்ட தூக்குத்தண்டனை 4 ஆம்.

கிரோசின் எண்ணை கிணறு:—அதிஷ்டமுள்ளவன் மண்ணைத்தோட்டாலும் போன்னாகும். மேல்நாட்டில் டிட்ஸ்வைவல் என்னுமிடத்தில் ஈ. எல் டிரேக் என்பவர் ஒரு கிணறு தோண்டுவதற்காகப் பிரயத்தனப்படுகிறபோது, ஆயுதத்தால் பூமியில் குடைகிறபோது திடீரென்று குடைந்து கொண்டிருந்த ஆயுதம் பூமியின் அடிக்குகையொன்றில் புகுந்து மறையவும், அந்தத் துவாரம் வழியாய் உள்ளிருந்த எண்ணெய் வெளிக்கிளம்பியடித்தது. பிறகு அதன் உபயோகம் கண்டுபிடிக்கப்பட்டு உலகமெல்லாம் பரவ ஆரம்பித்த காலையில் "ஈ. எல். டிரேக்" என்பவர் குபேரனுக்கு மிஞ்சிப்போய் விட்டார் உபயோகமற்ற தரிசு நிலங்களாகக்கிடந்த பூமிகளெல்லாம் பொன் விளையும் நிலமாக மாறிப்போயிற்று. அதிஷ்டம் வருகிறபோது சொல்லிக்கொண்டா வருகிறது.

---

சேலத்தில் பிளேக்:—சேலத்தில் மறுபடியும் பிளேக் வந்துவிட்டதென்ற விஷயம் நேயர்களுக்கு மிகவும் விசனத்தை உண்டுபண்ணுமென்பதற்கு ஐயமில்லை. கிச்சிப்பாளையம் என்னும் கிராமத்தில் அதிக மும்மரமாய்த்தொடங்கியிருக்கிறது. சென்ற ஆகஸ்டு மாதம் முதல் தேதிமுதல் 14௳ வரையில் 33-கேஸ்கள் உண்டாயின. இச்சமாசாரத்தைக் கேட்ட கலெக்டர் மிஸ்டர் பக்லீ ஒசூரிலிருந்து வந்து இவ்வூர் பிரதான நகரவாசிகளோடு டவுன் ஹாலில் ஒருசபைகூட்டி இச்சமாசாரத்தைப்பற்றி ஆலோசித்து கிச்சிப்பாளையத்துக்கு சென்று வீடுகளை யெல்லாம் பரிசோதித்தார். அவ்விடமிருந்து வருகிறவர்களுக்குப் பாஸ்போர்ட் கொடுக்கும்படியாகவும் இவர் உத்தரவு செய்திருக்கிறார். முனிசிபல் அதிகாரிகள் அதிக சிரமப்பட்டு வேலை செய்து வருகின்றனர். இரண்டு மாதங்களுக்குமுன் ஊரைவிட்டுப் போயிற்று என்று எண்ணிய இந்தப் பிளேக் திரும்பவும் வந்து விட்டது மிகவும் விசனிக்கத்தக்கதே.

---

விநோதமரணம்:—நாகப்பட்டணத்திலிருந்து சென்னைக்குச் சென்று 'மெஸ்ஸர்ஸ்' பெருமாள்செட்டியிடம் வியாபாரம் செய்துவந்த அந்தணர் ஒருவர் சென்ற ஞாயிற்றுக்கிழமை லிங்கிசெட்டித்தெருவிலிருந்து பகல் 11-மணி சுமாருக்கு ரிக்ஷா ஏறி பிராட்வே வழியாய்ப் போகையில் திடீரென்று வண்டியிலேயே இறந்தாராம். வண்டிக்காரன் பயந்து போலீஸ் ஸ்டேஷனில் கொண்டுபோய் ஒப்புவித்து நடந்த சங்கதிகளைத் தெரிவித்தானும். இறந்தவருடைய சட்டைப்பையில் ரூபா 2-ம் "பெருமாள் செட்டி அன் ஸன்ஸ்" என்ற விலாஸமுள்ள கடிதமும் இருந்தன

வாம். அப்பால் இந்தத்துப்பின்பேரில் போலீஸார் பெருமாள் செட்டியை விசாரித்து இறந்தவருடைய விபரங்கள் தெரிந்து நாகப்பட்டணத்திற்குத் தந்தியனுப்ப பந்துக்கள் வந்தார்களாம் பிறகு பிரேதத்தை ஆஸ்பத்திரியில் பரிசோதித்ததில் ரத்தப்பையின் வியாதியால் இறந்தாரென்று தெரியவந்ததாம்.

---

சீனர்களுடைய சவச்சடங்கு:—சீனன் ஒருவன் செத்துப் போனால் அவனுடைய பிரேதத்தை பையக்குழியில் கொண்டு வைத்து, மார்க்க போதகரால் செய்யப்படவேண்டிய சடங்காசாரங்களைச் செய்துமுடித்தபின், அவனுடைய இனஜனத்தார் அந்தக் குழியில் ஒரு கோழிக்குஞ்சு, இரண்டு மூன்று வகையான மாமிசத்துண்டங்களும் ஒரு கூடை நிறைந்த அரிசியும், காய்கரி பதார்த்தங்கள் சிலதும் எரிந்து, விஸ்கி என்னும் மதுபானப் புட்டி ஒன்றைத் திறந்துபிரேதப்பெட்டிமேல் ஊற்றிவிட்டுமண்ணால் மூட, இன்னுஞ்சில இனஜனத்தார் மெழுகுவர்த்திகளையும் விளக்குக் கூண்டுகளையும் கொளுத்திப்பிடித்துக் கொள்வார்களாம். பிரேதக்குழியில் போடுகிற பண்டபலாதிகள் இறந்தவன் மறு உலகம் சேருமட்டும் அவனுக்கு ஆகாரமாய் உதவுமென்பதும், இந்தத் தீபங்களாலவன் மறுஉலகத்துக்குச் செல்லும் வழியில் இருள் நீங்கிப் பிரகாசமுண்டாகுமென்பதும் சீனர்களுடைய கொள்கைகளாம்.

---

பீமசேனன்:—லண்டன்நகரில் ஜான்தாமஸ் என்னும் ஒருபாலகனிருக்கிறான். அவனுக்கு ஆறுவயது. இவன்வயதுக்கு மேற்பட்டபருமனுள்ளவன். இவனைபார்த்த ஒருடாக்டர் தயதபிப்பிராயத்தை எழுதுகிறார். இவன் சிறியவனாயிருந்தாலும் ஒரு புருஷனைத் தூக்கிக்கொண்டு சுலபமாக நடப்பான். இவனைப் பள்ளிக்கூடத்துக்குப்போவென்றால் தன் கால்கள் நோகின்றன என்றான். இதுநிஜமல்ல; சரீரம் பருமனாயிருப்பதால் வெகுதூரம் நடக்கமுடியாது. புத்தி சக்தி வயதைத் தோற்கடிக்கிறது. இவன் பகலெல்லாம் நித்திரை செய்வான். இவனுக்கு அழகிய உடுப்புகளைத் தரிப்பித்து பலஜனங்கள் ஸஞ்சரிக்கும் இடத்துக்கு அழைத்துப்போய் பெற்றோர்கள் பொருள் சம்பாதிக்கின்றனர். இவனைச் சிறுபிள்ளைகளுடன் விளையாடவிடுவதில்லை. பள்ளிக்கூடத்துக்கு அனுப்பினால் மற்ற வித்தியார்த்திகள் பாடத்தைவிட்டு இவனைப் பார்ப்பதில் இச்சைகொள்வர். இவனுக்கு ஸ்கூல் பெஞ்சு போதாது. இவனை வண்டியிலேற்றினால் இடம் போதாது. குதிரை இழுக்காது இந்தவாறு அந்த டாக்டர் எழுதுகிறார். இதுவும் ஒரு வியப்புதான்.

## விசித்திர விஷயங்கள்.

ஓர் குருட்டுக்குரங்கு :—பிரஸ்லாவில் ஒரு குரங்குக்குக்கண்ணில் பூவிழுந்தது அதனை ஆஸ்பத்திரிக்கனுப்பி சொஸ்தப்படுத்தினார்கள். இப்போது அது மூக்குக்கண்ணாடிபோட்டுக்கொண்டு உலாத்திக்கொண்டிருக்கிறதாம்.

ஒரு தருமப்பெட்டி :—லிவர்பூல்பட்டணத்திலிருக்கிற சிறு குழந்தைகளுக்கான தரும ஆஸ்பத்திரியில் ஒரு தருமப்பெட்டி (Poor Box) வைக்கப்பட்டிருக்கிறது. தருமகுண சிந்தையுள்ளவர்கள் அதில் பணம் போடும்போதெல்லாம், உனக்கு வந்தனம், என்கிற வார்த்தையை அந்தப்பெட்டி காண்பிக்கிறதாம்.

ஒரு ஆச்சரியமான பெட்டைக்கோழி :—ஓஹியோவுக்குச் சமீபத்திலுள்ள மிஸ்டர் சேலம் பியர்ஸ் என்பவர் ஒரு பெட்டைக்கோழி வைத்திருக்கிறார். அது அங்குள்ள இலந்தை மரத்தின் மேல் உட்காருமாயின், அன்று மழைமுதலியன இல்லாத சௌகரியமான காலமாயிருக்கும். அது ஷை இலந்தை மரத்தின்மீதில்லாது இறங்கித்தன் கூட்டிற் சேருமாயின், அன்று காலநிலை அசௌகரியமுள்ளதாய் இருக்குமாம். ஆகையால் கவர்ன்மெண்டாருடைய பாரோமெடர் செய்கிறவேலையை அக்கோழியே செய்துவிடுமாம்.

சோப் :—பிளோரிடாவிலுள்ள ஜனங்கள் சோப்புக்குப் பதிலாய் துணி வெளுக்கிறதற்கு, ஆரஞ்சிப்பழத்தின் சாற்றைப் பிழிந்து துணியின்மேல் ஊற்றி நன்றாய்க்கசக்கிப்பிழிந்துவிட்டால் துணி பனிக்கட்டி போல் வெண்மை நிறமாய்விடுமாம்.

புகைப்படத்தில் புள்ளிகள் :—சீமையில் ஒரு போட்டகிராபர் ஒரு பெண்ணைப் படமெடுத்து அச்சடித்துப் பார்க்கும்போது அவள் முகத்திலில்லாத சிறு புள்ளிகள் படத்தின் முகத்தில் காண 10நாள் கழித்து அப்பெண்ணைப் பார்க்க அம்மைக்கொப்பளங்கள் அவள் முகத்தில் காணப்பட்டனவாம்.

ஓர் சன்னியாசியினுடைய தீர்க்க தரிசனம் :—ரோம் நகரத்துக்கடிதர் 'கிராணிகல்' என்னும பத்திரிகைக்கு எழுதியிருக்கின்றார். ரோம் நகரத்து கத்தோலிக்க குருமடத்தில் ஒரு சந்நியாசிக்குச் சிறிது சுகயீனம் நேரிட போப்பரசருடைய அந்தரங்க வைத்தியராகிய டாக்டர் லப்பரணி அவரைப் பார்வையிடும்படி வரவழைக்கப்பட்டார். டாக்டர் லப்பரணி அவரை பரிசோதனைசெய்தபின் அவருக்கு யாதொரு நோக்காடும் இல்லையென்

றும், அவருடைய உடற்சோர்வு இரண்டு நாளைக்குள் குணமடைந்து விடுமென்றும் சொல்லிவிட்டு வெளியேறிவிட, அவர் வெளிச்சென்றபின் சன்னியாசியார் தமது பக்கத்திலிருந்த ஒரு குருவைப் பார்த்து, சகோதரரே! நான் இரண்டு நாளைக்குள் தேகவியோகமாவேன்; நீர் ஒரு மாதத்துக்குள் புவன வாழ்வை புறக்கணித்து சுத்த ஜீவியத்தை யடைவீர், என்னைப் பரிசோதனை செய்யவந்த டாக்டர் லப்பரணியோ இற்றைக்கு 3-மாதத்துக்குள் நம்மிருவரையும் மறு உலகில் சந்திப்பார் என்றார். இவருடைய தீர்க்கதரிசனைப்படி 48-மணி நேரத்திற்குள் அவர் சாக, மறு மாதம் அதே தினத்தில் மற்றக் குருவானவரும், சொன்ன மூன்று மாத கால அளவுக்குள் டாக்டர் லப்பரணியும் காலஞ் சென்றார்கள்.

---

மூன்று குழந்தைகள் பிரந்தனவாம்:—சேலம் ஜில்லா தர்மபுரி தாலூகா கோணங்கி அள்ளி கராமம் மஜரா புதூர் கிராமத்தில் கந்தப்பாசாரி என்கிறவரின் மனைவியார் 4—8—10 செவ்வாய்கிழமைய தினம் இரவு மூன்று ஆண் பிரஜைகளைப்பிரசவித்து குழந்தைகள் மூன்றும், தாயும் சௌக்கியமாக இருக்கிறார்களாம்.

---

## நேயர்களுக்கோர் நிருபம்.

### நண்பர்காள்! சற்றே செவிசாய்மின்.

உலகத்திலுள்ள மானிடரனைவரும் நித்ய சுகஜீவியாய் வாழுதற்கும், பெறுதற்கரிய அறம் பொருள் இன்பமாகிய மூன்றையும், இம்மையிற்பெற்று மறுமையில் வீடாகிய மோக்ஷத்தைப்பெறுதற்கும் சரீராரோக்கியமின்றி நிகழாதென்பது தேற்றமே. உலகவாழ்க்கையிலும் தத்தங்கைங்கிரியங்களிற்றளராது நிற்பதற்கும் தன் நன்மைக்காகவும் தமர்நன்மைக்காகவும் சகநன்மைக்காகவும் பாடுபட்டு உலகமெல்லாம் புகழ்க்கொடி நாட்டுதற்கும் தேகாரோக்கியமே. இருளடர்ந்த இவ்வுலகில் நல்வினையுந்தீவினையும், பாபமும் புண்ணியமும் ஒன்றிற்கொன்று வேற்றுமையின்றி பாபத்தைப்போற் புண்ணியமும் புண்ணியத்தைப் போற்பாபமும் பரந்து கிடப்பதைப்பகுத்தறிந்து நடக்கும் மனுரோக்கியத்திற்குந் தேகாரோக்கியமே. அனவரதமும் அற்புத நிறைந்த பற்பல செயல்களுமியற்றி உலகத்திற்கோ ரருந்துணையாக்குவதும் திரேகாரோக்கியமே. ஆதலின் யாவருந் தேகசௌக்கியம் என்னும் அரிய பேற்றை பெறுதற்கும், பெற்றபின் பேணுதற்கும் வேண்டிய சாதனங்களைக் கைப்பற்றி யொழுகாவிடில் வாணாளும் வீணாளன்றோ! பண்டைநாளின் நடைபிறழ்ந்து காலவேறு பாட்டால் விபரீத ஞானந்தோன்றியவாங்கு விபரீத நோய்களுந்தொடரப்பெற்று, தற்காலம் நம்தேயமிருப்பது தௌர்பாக்கிய நிலைமையே என்பதை முற்காலத்தின் நிறைவை நோக்குழி தற்காலத்தின் குறைவு நன்கு புலப்படும். இத்தகைய பெருங்குறைவெல்லாம் நீங்கவும், நம்தேயத்தினர் அல்லிக்கொடிபோற் செழித்து ஆலம் விழுதுபோற் படரவும் "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்றபடி பிணியெய்தா வாழ்வைப்பெறவும், சிரகாலமுந்தீர்

க்க வச்சிரதேகிகளாயிருக்கவும் தம துக்ருணைப்பெருக்கத்தால் நம்தேயத் தினருக்குநலம் பயக்கவெழுந்துள்ள ஸ்ரீமாந் சந்திரசேகரின் மாட்சிமை பெரிது பெரிது. இவரால் வெளிவந்துள்ள "சுதேச வைத்திய ரத்தினம்" என்னு மரிய பெரிய ஆயுர்வேத சாஸ்திரத்தைப்பற்றிப் பேசும் புகழ்ச்சிகளை எம் காதிரண்டும் கேட்டு முடிபோகவில்லை. இத் தகைய நூலை யாம் இதுகாறும் பாராத பெருங்குறைவிற்குப்பெரிதும் விசனிக்கிறோம். நிற்க தற்காலமும் "வைத்திய போதினி" யென்னும் பெருமையான்ற பத்திரிகையின்வாய் நோய்களையும், நோயின்குணங்களையும் நோயை நிவாரணிக்கும் சுருதி யுக்தி அனுபவங்களாற்றெளிந்த அவுடதப்பிரயோகங்களையும், யாவருங்கொள்ளை கொண்டுணரும்படி தெள்ளிதின்விளக்கி நிற்கும் இதன் அருமை பெருமைகளை எமது நாவொன்றால் நவிலுந்திறத்ததன்றே. ஆதலின் யாமெல்லோரும் கனம்பத்திராதிபரவர்களுக்கு இன்னு மிவைபோன்ற உலகநன்மைக்கேதுவான அரிய நூற்களியற்ற வேண்டுமென்னும் மனவெழுச்சிக்கும் ஊக்கத்திற்கும் உலகக்குறைவே தன்குறை வென்று நினைக்கும் பத்திராதிபரின் பெருந்தன்மையில் நூற்றிலொரு பங்கேனுமுபயோகித்து வாக்கு சகாயங்களால் உதவிபுரியவேண்டுமென்பதே எமதுகோறிக்கை. யாவரும் இதனை நன்குகவனிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். அன்றியும் அருந்துணையாயொளிரும் பத்திராதிபருக்கும் எஞ்ஞான்றும் வச்சிரசரீர வாழ்வருள சர்வதயாபரத்னி முதல்வனை அனவரதமும் மனவிரதமாய்ப்பிரார்த்தனை பூண்டொழுகுவோமாக. ஈண்டு யாமும் பத்திராதிபருக்கு மங்களவாழ்த்துக்கூறி இத்துடன் நிறுத்துவோம்.

## வாழ்த்து.

அங்கணன் றிலத ஞால மனைத்தினுஞ் சூழ மாந்தீ
நங்கணுள் சிறக்க நாளு ழ்யிநடன் நிலைக்க நற்சேல்
வங்கணுடோறு மோங்கி வாழ்கச் சேய் வலேன்றுபூண்ட
கங்கணன் "சந்திரசேகர" இறை வாழ்க மர்தோ.

சுபம்! சுபம்!! சுபம்!!!

இங்ஙனம்,

**M. S. சுந்தரம் ஆசாரி,**

மார்க்கயன் கோட்டை.

---

## மானிடரின் ஏழு பருவங்கள்.

### SEVEN AGES OF MEN.

---

நானிலம் யாவுமோர் நாடக சாலையே
ஆண்பெண் யாவரும் அதில்நடிப் பவர்தாம்
மறைவுந் தோற்றமும் மற்றவர்க் குள்ளன
ஆயுள் நாளில் எயபல் வேடம்
எடுத்தவர் புவியில் நடிப்பவ ராவார்
ஒவ்வொரு வருக்கும் ஒரேழு பருவமாம்

கக்கிக் கதறக் கைப்புறத் தேந்தி
செவிலித் தாய்வளர் சவலைப் பருவமே
பருவங் களில்முதல் பருவமதாகும்
தூண்ட நிற்ப வேண்டா வெறுப்பொடு
புத்தகப் பையொடு நத்தைபோல் ஊர்ந்து
மினுங்கிய வதனம் சிணுங்கிச் சிணுங்கிக்
காலைப் பொழுதிற் கல்விக் கழகம்
மெள்ளச் செல்லும் பள்ளிப் பிள்ளை—பின்
காதலித் திருக்கும் காரிகை தன்னுடைப்
புருவ மாதிய புழுங்கிய மனத்தொடு
தன்பா மாலை சாற்றித் துதித்து
மட்டிலா உலைபோல் நெட்டுயிர்ப் பெய்தும்
காதல னாகும் காளை—அதன்பின்
அதிசய சப்தமும் அடர்புலித் தாடியும்
பேர்அழி யாவகை பேணுதல் ஊக்கமும்
எதற்கும் சண்டைக் கிழுக்கும் படியாச்
சடுதியிற் கோபம் சனிப்பதுங் கொண்டு
நீர்மேற் குமிழிபோல் நிலையிலாப் புகழ்பெற
பீரங்கி வாயில் சீரங்கம் போக்கவும்
சித்தமா யிருக்கும் யுத்தவீரன்—பின்
செழிப்புறு சேவற் கொழுப்பினு லாகிய
பேரெழில் வாய்ந்த பேழைபோல் வயிறும்
நிர்த்தாட் சிணிய நேத்திரம் இரண்டும்
வழங்குங் காலத் தொழுங்கின் படியே
நறுக்கிய தாடியும முறுக்கிய மீசையும்
நல்லுப தேசமும் நாடறி வழக்கமும்
இன்ன யாவும் இனிதுறக் கொண்ட
பண்பார் நீதி பதி—அதன் பின்னர்
கச்சற் றேகமும் கால்களிற் சோடும்
மூக்கிற் றரித்து மூக்குக் கண்ணுடியும்
இருகவுள் தோலாம் இரும்பை வீழ்ச்சியும்
பாலியத் தினிது பத்திரப் படுத்திய
மேற்சோ டிறண்டும் மிகப்பெரி தாம்படி
ஒடுங்கிச் சுருங்கிய ஓரிரு பாதமும்
ஆணவப் பெருங்குரல் அனைத்தையும் இழந்து
குழவியின் குறுகிய குறலினைப் போன்று
கீச்சென வொலிக்கும் பேச்சையே கொண்டு
தேசலாம் குன்றிய மாசுலாம் குருபியே
ஆறும் பருவமாம்—அதன் பின்னர்
பல்லும் பார்வையும் சொல்லுஞ் சுவையும்
யாவையும் இழந்து யாவையும் மறந்து,
மறுவறும் சேய்என மதித்தனர் வெய்துவோன்
அடிக்கடி மாறும் இவ்வற்புத சரிதை
முடியும் இக்காட்சி யொடுமுடிந் திடுமே!

ர. போ.

## ஹாஸ்ய துணுக்குகள்.

ஓர் வீட்டுத் திண்ணையில் ஓர் ஸ்திரீயும் மற்றொரு திண்ணையில் இவளது சகோதரனும் நின்று கொண்டிருக்க, அச்சமயம் அவ்வீதி வழியே செல்ல நேரிட்ட மற்றொருவன் திண்ணையின் பேரில் நின்று கொண்டிருந்த இப்பெண்ணினிடம் வந்து அவளது கன்னத்தில் ஓர் முத்தம் குடுக்க இதைப் பார்த்த இவளது சகோதரன் என்ன ஐயா! என் தமக்கையை முத்தம் இட்டீர் என்று கேட்க இவன் இல்லை பையா முத்தம் இடவில்லை. கன்னத்தில் ஏதோ வடுவொன்று தெரிந்தது அதை உற்று நோக்கினேன். என்றும் மேலும் அதற்காக கோபியாதே இந்தா இதையெடுத்துக்கொள் என்று அணா நான்கை அப்பையன் கையில் வைக்க அதற்கு அப்பையன் ஓய் நான் நான்கு அணா வாங்குகிற வழக்கமில்லை. ரூபா ஒன்றுதான் வாங்குகிற வழக்கம் என்றானாம்.

வீ. ஏ. கேசவன், தஞ்சை.

ஒரு சுவாமிகளுக்கு பஞ்சபக்ஷிய பரமான்னத்துடன் செவ்வையாய் விருந்திட்டார்கள். சுவாமிகளும் போஜனப் பிரியராகையால், வயிறு முட்டத்தின்று திண்ணையில் உட்கார்ந்திருக்கையில் வீட்டு எஜமானி வந்து சுவாமி! கொஞ்சம் பகவத்கீதை பாராயணம் செய்விக்கட்டுமா? என்று கேட்கச்சுவாமிகள் வயிற்றைத் தடவிக்கொண்டு அப்பப்பா! இனி மேல் ஒன்றும் எடுத்துக்கொள்ளமுடியாது—என்று பதில் சொன்னார்.

---

## வெள்ளி சாமான்கள்.

கூஜா, டம்ளர், சொம்பு, பஞ்சபாத்திரம், கிண்ணி, டீசெட், காப்பு, புதுச்சேரி கொலுசு, பட்டை கொலுசு, முதலியவை மிகவும் நேர்த்தியான வேலைப்பாடுள்ளவைகளாய் விற்பனைக்கு தயார் செய்து வைக்கப்பட்டிருக்கின்றன. வேண்டியவர்கள் உடனே எழுதவும்.

**V. B. வெங்கடேசம செட்டியார்,**

ஜவுளி, வெள்ளி பாத்திர வியாபாரம்,

பேரிய தெரு கும்பகோணம்.

---

## தேசிக ஸம்பிரதாய விவர்த்தினீ ஸபா.

இந்நாமதேயம் பூண்ட ஓர் ஸங்கம் இத்திருக்குடந்தை திவ்யக்ஷேத்ர வாஸிகளாகிய சில சாஸ்திர வித்வான்களினுதரணையின் கீழ் சென்ற $1\frac{1}{2}$-வருஷகாலமாக நடைபெற்றுவருகிறது.

இச்சபையார் தூப்பில் நிகமாந்த மஹாதேசிகனருளிச் செய்திருக்கிற ஸ்தோத்ரபாடங்கள், ராமானுஜ மதகிரந்தங்கள், திருப்பாவை முதலிய பிரபந்தங்கள் இன்னும் பொது ஜன ஸாதகார்த்தமாக அப்போதைக்கப் போது தேவையாகத் தோன்றும் பல கிரந்தங்களையும் ஸம்ஸ்கிரத வியாக்கியானத்துடனும் தமிழ் மொழி பெயர்ப்புடன் பிரசுரித்து வருகிறார்கள். வர்ணாசிரமதர்மங்களைப் பரிபாலிப்பதி லுண்மையான அபிமானமுள்ளஒவ்வொருகனவானு மிதை கவனித்தலவசியம். **சந்தா விபரம்.** அயலூராருக்கு 12-ஸஞ்சிகைக்கு முன் பணம் கட்டவேண்டியது ரூபா 3—6—0. உள்ளூராக்கு ஸஞ்சிகை 1-க்கு 0—4—0. அயலூராருக்கு தபாற்கூலி உள்பட 0—6—0.

# ADVERTISEMENTS.

## ARYAN INITIATION!

OF THE

## SPIRITUAL BROTHERHOOD!!

OF THE

## INDIAN ACADEMY OF SCIENCE. !!!

Under the guidence of an Adept Master of the Brotherhood, a special Course of Lessons is now ready to initiate you into all the mysteries of LAYA and MANTRA YOGA of the Aryans giving practical methods for HINDU-HYPNOTISM, MESMERISM, TELE-PSYCHY, WILL-CULTURE, SPIRITUAL, HEALING, CLAIR-VOYANCE CALIR AUDIENCE CLAIR-SENTIENCE, SPIRIT-COMMUNATION, MEDIUMSHIP and other wonderful secrets for attracting SUCCESS, HEALTH, SPIRITUAL POWER and Soul-Bliss, as practised by the ancient Aryan Adepts.

This Course is the first of its kind in the world and anybody knowing to READ and WRITE ENGLISH can master it and practice its teachings to a wonderful degree.

With a complete outfit and fine Diploma of Membership of the 1st degree.

Price, Rs. 10 for the first 500 enrolments. The price will be raised to Rs. 15 shortly. Persons ordering the course should send a copy of their photos along with money in ADVANCE, No. V. P. System. Look sharp!

SELF-CULTURE, a Monthly Official Journal of the Indian Academy of science, is devoted to Mental, Psychic, Spiritual and Occult Sciences Philosophy, Spiritualism, Health-Culture, Vedanta and other Esoteric phases. It is edited by Dr. K. T. Ramasami, Dr. J. M. Peebles of (America) and Prof, J. M. Severn (of England.) Besides it has an able crops of contributors.

Annual subscription Rs. 3, to India. Foreign Sh. 4; To School Students and all Missionaries at a reduced rate of Rs. 2.

Send all orders and remittance direct to

*The Manager,*

**THE INDIAN ACADEMY OF SCIENCE,**

**KIZHANATTAM, Tinnevelly Dist., S. India.**

## பிரஹ்மஞான விளக்கம்.

இப்பத்திரிகை பிரமஹ்ஞான சபையிலுள்ள தமிழ்தெரிந்த சங்கத்தினர்களின் உபயோகத்திற்காக, 1909-ளு ஆகஸ்டுமீ 21—22-ம் தேதிகளில் நாகையிற் கூடிய தஞ்சைஜில்லா பிரஹ்மஞானசபை கான்பிரன்ஸில் தீர்மானித்த பிரகாரம் பிரசுரமாகின்றது.

**இதன் வருடசந்தா.**

| | | |
|---|---|---|
| இந்தியா, இரங்கூன், இலங்கை முதலிய விடங்களுக்கு | ரூ. | 1—0—0. |
| பிளுங்கு, சிங்கப்பூர் முதலிய விடங்களுக்கு ... | ரூ. | 1—8—0. |
| தனிப்பத்திரிகை ... ... ... ... | ரூ. | 0—2—0. |

**விளம்பர விகிதம்.**

| | ரூ. அ. ப. |
|---|---|
| முழுப்பக்கம் ஒரு மாதத்திற்கு ... ... | 8—0—0. |
| ,, மூன்று மாதத்திற்கு ... ... | 20—0—0 |
| ,, ஆறு மாதத்திற்கு ... ... | 35—5—0 |
| ,, ஒரு வருஷத்திற்கு ... ... | 60—0—0 |
| வரி யொன்றுக்கு 1-மாதத்திற்கு ... ... | 0—4—0 |

இதில் துண்டு விளம்பரங்களை வைத்து பிரசித்தப்படுத்த வேண்டுமானல் மேற்சொன்ன விகிதத்தில் பாதி விகிதத்திற்கு வைத்து அனுப்பப்படும்.

ஒருரூபாய்க்குக்குறைந்த விளம்பரம் ஒப்புக்கொள்ளப்படமாட்டாது.

S. வைத்திலிங்க முதலியார்,
காரைக்கால்.

---

ஓம்:
வந்தேமாதரம்.

## பாலசந்திர பற்பொடி.

கல்நார் பஸ்பம் முதலிய சுதேச அவுஷத முறையையும், கார்பாலிக் ஆசிட் முதலிய இங்கிலீஷ் முறையையும் அனுசரித்து தயார் செய்யப்பட்டிருக்கிறது. எவ்விதமான பல்நோயையும் தவராது தீர்த்து உறுதியாய் இருக்கும்படி செய்யக்கூடிய குணமுடையது. அநேக கனதனவான்களால் நற்சாக்ஷிபத்திர மளிக்கப்பட்டிருக்கிறது. சகல மானவர்களும் உபயோகிக்கவேண்டியதற்காக 1-அவுன்ஸ் அடங்கிய சீசா 1-க்கு அணு 2. ஷெடஜன் 1-க்கு ரூபா 1—2—0.

ஆலங்குடி முதல்தரமான இருவாளிப்பு பாக்குவெட்டிகள் 0—3—6 முதல் கிடைக்கும். வியாபாரிகளுக்கு தகுந்தகமிஷன் கொடுக்கப்படும்.

புரோப்ரைட்டர்,
பாலசந்த்ர டிரேடிங் ஹால்,
ஆலங்குடி,
நீடாமங்கலம் *S. I. R.*



## பத்தொன்பதாவது நூற்றாண்டின்
## ஓர் அதிசயம்.

# மன்மதரஞ்சன்.

**சம்போக சந்தோஷமளிக்கப் பேர்பெற்றது.**

பால்ய போகத்தாலும், மிதமிஞ்சிய அதிபோகத்தாலும், திரேகசுபாவமறிந்து போகிக்காததாலும் காமஸ்கலிதத்திற்கேதுவின்றி, துரிதஸ்கலிதத்திற்காளாகி யாதொரு இன்பசுகமின்றியும், இல்லற சுகத்தை யனுபவிக்க வல்லமையில்லாமலும் பரிதபிக்கும் அன்பர்காள்!

உமது திரேகம் என்ன நிலமையிலிருந்தாலும் சரி, உமக்கு என்ன பலன் வேண்டுமானாலும் சரி, தாதுபுஷ்டிக்கும் சுருசுருப்புக்கும் நம்பத்தகுந்ததும் உண்மையுமான மருந்து இதோ இருக்குது பார்! மன்மதரஞ்சன் மாத்திரை சுகதேகிகளும் சாப்பிடலாம். மனோற்சாகம், ஞாபகசக்தி, வீரியவிர்த்தி, போகசக்தி, இந்திரியக்கட்டு, தேகபலம், சரீராரோக்கியம் முதலியனவுண்டாகும். மறதி, சோம்பல், அசதி, துர்பலம், பசிமந்தம், அஜீரணம், இடுப்புவலி, துரிதஸ்கலிதம் முதலியவை நீங்கும் பரீட்சித்துப்பார்க்கவும். தீவிரமாயும் தீர்க்கமாயும் தாதுபுஷ்டியை உண்டாக்குவதில் இதற்கு மிஞ்சின அவுஷதமில்லை. பரிசைக்ஷக்கும் பலனுக்கும் உத்தரவாதம், இதற்கு வேறு பத்தியமே கிடையாது. புஷ்டியான ஆகாரம் சாப்பிடுவது அவசியம் இது (கோனனட்) என்ற ஓர் அமெரிக்க டாக்டர் கையாடிவந்த அருமையான முறை. 36-மாத்திரைகள் அடங்கிய புட்டி 1-க்கு விலை ரூபா 2. வி. பி. சார்ஜ 1-முதல் 6-புட்டிகள் வரையில் அணா 4 பிரத்தியேகம்:—என். ஆர். டிஸ்பென்ஸரி, கும்பகோணம்.

---

### ஜப்பான் சரித்திர விளக்கம்.

இப்புத்தகத்தில் ஜப்பானியரின் முற்கால ஸ்திதிக்கும், தற்காலஸ்திதிக்குமுள்ள வித்தியாசங்கள், ஜப்பானியரின் முன்னேற்றம், ருஷ்ய ஜப்பானிய யுத்தம் அவர்களின் நடை உடை பாவனைகள் ஜப்பானின் சீதோஷ்ண ஸ்திதிகள், அத்தேசத்திலுள்ள மலைகள், எரிமலைகள், ஏரிகள், நதிகள் முதலியனவும், இன்னும் பல அரிய இரகசியங்களடங்கிய இச்சிறு புத்தகம் தமிழறிந்த ஒவ்வொருவர் கையிலும் இருப்பது மிகவும் அவசியம் இப்புத்தகம் வேண்டியவர்கள் 4-அணாவுக்கு ஸ்டாம்பு அனுப்பினால், புத்தகம் தயாரானவுடன் அனுப்பப்படும். புத்தகம் தயாரான பிறகு வேண்டியவர்களுக்கு ரூபா 1. ஜாக்கிறதை

வைத்தியபோதினி ஆபீஸ், கும்பகோணம்.

# பி. சுப்பராயின் அபூர்வ ஆயுர்வேத ஔஷதங்கள்.

11. **ஜுவர சம்ஹாரி**:—தீராத நாள்பட்ட சகல சுரங்கள், குளிர்சுரம் முறை சுரம், வாத சுரம், பித்த சுரம், அஸ்தி சுரம், மலே சுரம் மார்வலி, காமாலே, பிடரிவலி, இடுப்புவலி, விலாவலி, முழங்கால்வலி, உடம்புவெளுப்பு, மயக்கம், தாகம், இருமுறை சுரம், நாலாமுறை சுரம் முதலிய சகல சுரங்களை அடியோடு போக்கும். டப்பா 1க்கு ரூபா 1, வி. பி. சிலவு அணு 5 பிரத்தியேகம்.

12. **உரோம சம்ஹாரி**:—இந்த சூரணத்தை மயிருள்ளவிடத்தில் தடவினல் வெகுளளிதில் மயிர் நீக்கிவிடும். சீசா 1க்கு அணு 4. 1 முதல் 6 சீசாக்கள் வரையில் வி. பி. சிலவு அணு 5 பிரத்தியேகம்.

13. **சுகந்த பல்பொடி**:—நல்ல ஜீரண சக்தியைத் தரும். பல் வலி எக்காலத்திலும் வராது. பல் எக்காலத்திலும் விழாது. சீசா 1க்கு விலே அணு 3 வி. பி. சிலவு 1 முதல் 5 சீசாக்கள் வரையில் அணு 5 பிரத்தியேகம்.

14. **ஸ்கலித ரக்ஷணி**:—பலஹீனத்தாலும், உஷ்ணத்தினுலும், சிற்றின்பத்தில் பாலியத்தில் நுழைந்து மூழ்கியிருந்த காரணத்தாலும், தூக்கத்திலும், சொப்பனத்திலும், இந்திரியம் தானுக வெளிப்படுவதை நிற்பாட்டி தேக திடத்தை தரும். சீசா 1-க்கு அணு 8, வி. பி. சிலவு 1-முதல் 6-சீசாக்கள் வரையிலும் அணு 5 பிரத்தியேகம்.

15. **உயர்ந்த கஸ்தூரி**:—மிகவும நேர்த்தியானதும், முதல் தரமானதும், காஷ்மீர் தேசத்திலிருந்து நேராக வரவழைத்த கஸ்தூரி நம்மிடத்தில் எப்பொழுதும் கிடைக்கும், தோலா 1-க்கு ரூபா 48. 1-ரூபாய்க்கு குறையாமல் சில்லரையிலும் விற்கப்படும். வி. பி. சிலவு பிரத்தியேகமாகும்.

16. **தேள்கொட்டின் மருந்து**:—இம்மருந்தை விஷம் தீண்டிய இடத்தில் தடவினுல் தக்ஷணமே விஷமிறங்கி வருத்தப்பட்டு சகிக்க முடியாத வேதனையில் நின்று நீங்கி யாவரும் ஆச்சரியப்படத்தக்க விதமாய் ஆனந்திக்கும்படியான அனுகூலத்தைத் தரும். கிரயம் சீசா 1-க்கு அணு 2. இந்தியாவிலும் பர்மாவிலும் 1-முதல் 12-சீசாக்கள் வரையிலும் வி. பி. சிலவு அணு 5 பிரத்தியேகம்.

**முக்கியகுறிப்பு**:—ஒரே தடவையில் 12-சீசாக்களுக்குக் குறையாமல் வாங்கினுல் டஜன் 1-க்கு 2—8—0 வீதம் கொடுக்கப்படும். வி. பி. சிலவு அணு 5-பிரத்தியேகம். இக்குறிப்பு தேள் மருந்து தவிற மற்றெந்த மருந்திற்கும் சம்மந்தப்படமாட்டாது.

17. **மேகரண மருந்து**:—இதை வெள்ளைத் துணியில் தடவி ரணங்களின்மேல்போட, அரையாப்பு, கண்டமாலே, விப்புருதி, தொடைவாழை, செவ்வாப்பு, ஆசனப்பவுத்திரம், அழுகுளியன், பிளவை, கிரந்தி மேக வெடிப்பு, இலிங்கப்புற்று, யோனிப்புற்று முதலிய இரணங்கள் ஆறி சொஸ்தமாகும். விலே சீசா 1-க்கு அணு 8, இந்தியாவிலும் பர்மாவிலும் 1-முதல் 3-சீசாக்கள் வரை வி. பி. சிலவு அணு 5 பிரத்தியேகம்.

---

**பி. சுப்பராய், பாங்கிப்பேட்டை, தென்னுற்காடு ஜில்லா.**

## பி. சுப்பராயின் அபூர்வ ஆயுர்வேத ஔஷதங்கள்.

18. **கண்டசுத்தி மாத்திரைகள்** :—டைரக்ஷனில் சொல்லியபடி இதை சாப்பிட்டு வந்தால் தொண்டை கட்டு, தொண்டை கம்மலை நீக்குவதன்னியில், இன்பமாய் பாடுவதற்கு இசைந்த குறலைத்தரும், சங்கீத வித்வான்களுக்கும், பிரசங்கஞ் செய்யப்பட்டவர்களுக்கும், உபாத்தியாயர்களுக்கும் இது ஓர் அருமையான ஔஷதம். எத்தனை நேரம் பாடினாலும், பிரசங்கித்தாலும், குறல் கம்மாது, இனிய ஓசையைத்தரும். கிரயம் சீசா 1-க்கு அணா 8. இந்தியாவிலும், பர்மாவிலும் 1-முதல் 6-சீசாக்கள் வரையில் பாக்கிங்கு தபால் முதலிய சிலவு அணா 5-பிரத்தியேகம்.

19. **சுகந்த ஸ்நாநப்பொடி** :—இந்த வாசனைப்பொடியை தினந்தோறும் தேகத்தில் தேய்த்து ஸ்நாநம் செய்துவந்தால் தேகத்திற்கு சுகந்த பரிமளத்தைத் தந்து தேமல், அறிப்பு, சொரி, சிரங்கு, கற்றாழை நாற்றம், கைகால் எரிச்சல், மேக காங்கை, சரீரவரட்சி, கணச்சூடு. வெடிப்பு, கரப்பான், தலைவலி, சொரி மேகம், படர் தாமரை, மேக ஊரல், கிரந்தி முதலிய இன்னும் அநேக வித தோலைப்பற்றிய வியாதிகள் தீரும். நல்ல வாசனையும் காந்தியும லக்ஷ்மீகரமும் ஆரோக்கியமும் உண்டாகும். அறைக்குழந்தைமுதல் யாவரும் உபயோகிக்கலாம்.
டப்பா 1-க்கு விலை அணா 8, வி. பி. சிலவு அணா 3 பிரத்தியேகம்

20. **சஞ்சீவி மாத்திரைகள்** :--இம்மாத்திரைகளினால் தலைவலி தலைபாரம், சளி, இருமல், சுரம், மயக்கம், வாந்தி, விஷசுரம், வயிற்றுப்பிசம், வயிற்றுவலி, தெற்குத்திக்கணை முதலியநோய்கள் தீரும். அறைக்குழந்தை முதல் யாவரும் உபயோகிக்கலாம். விலை சீசா 1-க்கு அணா 0—10—0. இந்தியாவிலும் பர்மாவிலும் 1-முதல் 6-சீசாக்கள் வரையில் அனுப்ப வி. பி. முதலிய சிலவு அணா 5 பிரத்தியேகம்.

21. **மஹா கோரோஜனை மாத்திரைகள்** :—இம்மாத்திரையினால் இருமல், சளி, சுரம், வயிற்றுப்பிசம், இளைப்பு, வலி, மயக்கம், தெற்குத்திக்கணை, ஜன்னி, வயிற்றுப்போக்கு, தோஷம், முக்குமாந்தம், ஊதுகணம், செவ்வாப்பு, கடுவான், கரப்பான், பால் மாந்தம் முதலிய எல்லா மாந்தங்களும், கருங்கிரந்தி, செங்கிரந்தி, மலஜலக்கட்டு முதலியதுகளும் மலை சுரம், முறை சுரம், முதலான பலவித சுரங்களும் அடியோடு நீங்கும், சீசா 1-க்கு விலை அணா10. 1-முதல் 6-சீசாக்கள் வரையில் வி. பி. சிலவு அணா 5 பிரத்தியேகம்.

22. **கரப்பானுக்கும் சொரிசிரங்குக்கும் மருந்து** :—இம்மருந்தை டைரக்ஷனில் சொல்லியபடி மேலுக்குமட்டும் உபயோகித்துவந்தால் வெகு சீக்கிரத்தில் எவ்வித நமைச்சல்களும், சொரி. சிறங்கு, வரட்டுச்சொரி, அநேக குழந்தைகளுக்கு தேகமெங்கும் அல்லது சிலபாகங்களில் கண்டு அதிக நமைச்சலையும் தொந்தரவையும் தருகின்ற எவ்வித கருப்பான்களையும் வெகு சீக்கிரத்தில் ஆற்றிவிடும். விலை சீசா 1-க்கு அணா 0—8—0. இந்தியாவிலும், பர்மாவிலும் அனுப்ப வி. பி.சிலவு 1 அல்லது 2-சீசாக்கள் வரையில் அணா 5 பிரத்தியேகம்.

பி. சுப்பராய், பரங்கிப்பேட்டை, தென்னாற்காடு ஜில்லா.